# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

**අංක 2164 - 2020 පෙබරවාරි මස 20 වැනි බ්‍රහස්පතින්දා - 2020.02.20**

*2164 ஆம் இலக்கம் - 2020 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 20 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி II - சட்ட சம்பந்தமானது

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| சட்டங்கள் | - | பிசுக்கால் மார்சல்மாரின் நியமனங்கள் | 30 |
| சட்டமூலங்கள் | - | பிசுக்கால் விற்பனை பற்றிய அறிவித்தல்கள் | – |
| மேன்முறையீட்டு நீதிமன்றச் சட்ட அறிவித்தல்கள் | - | மரணசாதன வழக்குகளின் அறிவித்தல்கள் | - |
| உயர் நீதிமன்ற அறிவித்தல்கள் | - | சட்டக் கல்விச் சபையின் அறிவித்தல்கள் | - |
| உயர் நீதிமன்ற குற்றவிசாரணை பற்றிய அறிவித்தல்கள் | - | நொத்தாரிசுமார் பெயர்ப்பட்டியல் | - |
| மாவட்ட நீதிமன்ற, நீதிவான் நீதிமன்ற அறிவித்தல்கள் | - | நானாவித அறிவித்தல்கள் | 33 |
| கடனிறுக்க முடியாமைக்கான வழக்குகளின் அறிவித்தல்கள் | - | பிசுக்கால் மார்சல்மாரின் நியமனங்கள் | - |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2020, மாச்சு 13ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2020, பெப்புருவரி மாதம் 28 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரனியல் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."

**கங்கானி லியனகே,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2020 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.

இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

29-B82009-353 (2020/02)

# பிசுக்கால் ஏல விற்பனை

*194/MB ஆம் இலக்க வழக்குடன் தொடர்புடைய மாரவில மாவட்ட நீதி மன்றின் 13/2020ஆம் இலக்கத்தின் கீழ் பிசுக்கால் மூலம் செய்யப்படுகின்ற ஏல விற்பனை*

*பெறுமதியான ஆதனம் ஒன்றினை பிரசித்த ஏல விற்பனை மூலம் விற்பனை செய்தல்*

*மக்கள் வங்கி எதிர் 1. சனூரி ஒடோ இன்டர்நெஷநல் மட்டுப்படுத்தப்பட்ட தனியார் நிறுவனம்*
*2. யாப்பா அப்புஹாமிலாகே கபில சமன்த யாப்பா*

*வட மேல் மாகாணம், புத்தளம் மாவட்டம், மாரவில காணிப் பதிவகப் பிரிவிற்கு உட்பட்ட பிடிகல் கோரளை தெற்கு யடகலன் பத்துவ, நாத்தாண்டிய பிரதேச சபை எல்லைக்குள் அமைந்துள்ள, மஹவெவ பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட, மஹவெவ கிராம உத்தியோகத்தர் பிரிவு, மஹவெவ என்ற கிராமத்தில் அமைந்துள்ள "தன்வல அகார" என்ற காணிக்கு உத்தரவு பெற்ற நில அளவையாளர் திரு. ஏ. ஏ. விமலசேன அவர்களால் 2006.10.31ஆந் திகதி அளந்து தயாரிக்கப்பட்ட 3512A ஆம் இலக்க வரைபடத்தின் 01ஆம் இலக்க காணிக்கான எல்லைகள்.*

*வடக்கு:- உத்தரவு பெற்ற நில அளவையாளர் திரு. எம். ரி. பிரநாந்து அவர்களின் 3035ஆம் இலக்க வரைபடத்தின் 01ஆம் இலக்க காணி.*
*கிழக்கு:- அநுலா அமரதுங்க மற்றும் சீலவதி அமரதுங்கவுக்குச் சொந்தமான காணியும், எம். ஏ. தயானந்தவிற்குச் சொந்தமான காணியும்.*
*தெற்கு:- டப்ளியூ. ஜி. சேதிரிஸ் அப்புஹாமிக்குச் சொந்தமான காணியும், ஆர். ஜி. எலோசிங்ஹோவுக்குச் சொந்தமான காணியும்.*
*மேற்கு: ஆர். ஜி. எலோசிங்ஹோவுக்குச் சொந்தமான காணியும் பிரதேச சபை பாதையும்.*

*என்ற எல்லைகளுக்குட்பட்ட இரண்டு றூட், இருபத்தி மூன்று பேர்ச் (ஏ.00, றூட். 02, பேர்ச் 23) எனப்படும் பூச்சியம் தசம் இரண்டு ஆறு பூச்சியம் ஆறு ஹெக்டயார் (0.2606 ஹெக்டயார்) விஸ்தீரணமுள்ள காணியும் அதனுள் அமைந்துள்ள மரம், செடி, பழ வகை, கட்டிடங்கள் உட்பட அனைத்தும் அடங்கலாக.*

*காணியின் அளவு ஏ.00, றுட். 02, பேர்ச் 23*
*இது மாரவில காணிப்பதிவகததில் K 110/149இன் கீழ் பதிவு செய்யப்பட்டு உள்ளது.*

**ஆதனத்துக்குச் செல்லும் பாதை.**
*A 3 பிரதான பாதையின் ஊடாக மஹவெவ விஹாரை சந்தி வரை சென்று அந்த சந்தியால் (59ஆம் கிலோ மீட்டர் கட்டை) இடது பக்கம் திரும்பி விஹாரை வீதியில் சுமார் 400 மீட்டர் அளவு செல்லும் போது T சந்தி அகப்படும். அவ்விடத்தால் இடது பக்கம் திரும்பி சுமார் 250 அளவு சென்று மீண்டும் இடது பக்கம் திரும்பி செல்லும் போது அப்பாதையில் யாப்ப ஸ்டோர்ஸ் அமைந்துள்ள வலைவுக்கு அருகில் இடது பக்கமாக குறிப்பிட்ட ஆதனம் அமைந்துள்ளது.*

*2020 ஆம் ஆண்டு மார்சு மாதம் 24ஆந் திகதி பி. ப. 02.00 மணிக்கு*
*ஆதனம் அமைந்துள்ள இடத்தில் பிரதி பிசுக்கால் மூலம் ஏல விற்பனை செய்யப்படும்.*

**பணம் செலுத்தும் முறை:**

*ஏல விற்பனையின் இறுதியில் ஆதனத்தை வாங்கியவர் கீழ்க் குறிப்பிட்டுள்ளவாறு பணத்தைச் செலுத்தல் வேண்டும்.*

*1. வாங்கிய விலையின் (நூற்றுக்கு இருபத்தைந்து) 25%*
*2. மாகாண அதிகார சபையின் வரியாக (நூற்றுக்கு ஒன்று) 1%*
*3. பிசுக்கால் கமிஷன், சிவில் நடை முறைச் சட்டத்தின் 258ஆம் சரத்தின் பிரகாரம் பிசுக்கால் கமிஷன்*
*4. அனைத்து விளம்பர கட்டணங்கள்*
*5. எழுதுவினைஞர் அறிவிப்பாளர் கட்டணமாக ரூபா 500.00/-*

6. விற்பனைச் செலவுகள், வேறு கட்டணங்கள் இருப்பின் அந்தப் பணம்.

7. விற்பனை அத்தாட்சிப்பத்திரத்துக்கான முத்திரைக் கட்டணம்.

குறிப்பிட்ட ஆதனத்தின் விற்பனை நீதி மன்றின் அங்கீகாரத்துடன் நடைபெறுகின்றது.

வாங்கிய விலையின் மிகுதி 75% மான பணத்தை விற்பனைத் திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் வைப்புச் செய்யப்படல் வேண்டும்.

மேற் குறிப்பிட்டவாறு பணத்தை 30 நாட்களுக்குள் மேற் குறிப்பிடப்பட்ட முழுத் தொகையையும் செலுத்தாவிடின் ஏற்கனவே செலுத்திய பணத்தை திருப்பிச் செலுத்தாமல் விடவும், மீண்டும் ஆதனத்தை ஏல விற்பனையின் மூலம் விற்பனை செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும்.

உரிமைப் பத்திரம் வேறு விபரங்களை பரிசீலிப்பதற்கும் மேலதிக விபரங்களையும் "பிராந்திய முகாமையாளர், மக்கள் வங்கி, பிராந்திய பிரதான அலுவலகம், (முதலாம் மாடி) இல. 79, மாரவில வீதி, நாத்தாண்டிய" என்ற முகவரியில் பெற்றுக் கொள்ள முடியும்.

தொலை பேசி:- 032 - 2253300, 032 - 2253301, தொலை தகல்:- 032 - 2255247

பதிவாளர்/பிரதி பிசுக்கால்,
மாவட்ட நீதிமன்றம்,
மாரவில.

02 - 605

---

55/MB ஆம் இலக்க வழக்குடன் தொடர்புடைய புத்தளம் மாவட்ட நீதி மன்றின் இ/இல. 03/2020இன் கீழ் பிசுக்கால் மூலம் செய்யப்படும்
பெறுமதியான சொத்து பிரசித்த ஏல விற்பனை

வட மேல் மாகாணம், புத்தளம் மாவட்டம், புத்தளம் காணிப்பதிவகப் பிரிவிற்கு உட்பட்ட, கல்பிடிய கோரளை, கல்பிடிய பத்துவ, கல்பிடிய பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட, கல்பிடிய பிரதேச சபை எல்லைக்குள் அமைந்துள்ள கந்தக்குளிய கிராம அலுவலர் பிரிவுக்கு உட்பட்ட, கந்தக்குளிய என்ற கிராமத்தில் அமைந்துள்ள, மொஹமட் தம்பி குடியிருக்கும் தோட்டம் என்ற காணிக்கு, உத்தரவு பெற்ற நில அளவையாளர் திரு. எம். எச். சபார் அவர்களினால் 2012.07.03 ஆந் திகதி அளந்து தயாரிக்கப்பட்ட 11829 ஆம் இலக்க வரைபடத்தின் 01ஆம் இலக்க காணித் துண்டுக்கான எல்லைகள்:

வடக்கு:- பிரதேச சபை பாதையும், ஜுட் பிரநாந்துவிற்குச் சொந்தமான காணியும்
கிழக்கு:- டபிள்யூ. ஆர். மாலினி பெரேராவுக்குச் சொந்தமான காணி
தெற்கு:- எஸ். எச். அபூதாஹிருக்குச் சொந்தமான காணி
மேற்கு: எம். அலவ்தீனுக்குச் சொந்தமான காணி

என்ற எல்லைகளுக்கு உட்பட்ட ஒரு றூட் பதினெட்டு பேர்ச் (ஏ.00, றூட். 01, பேர்ச் 18) பரப்பளவுள்ள காணியும் அதனுள் அமைந்துள்ள மரம், செடி, பழவகை, கட்டிடங்கள் உட்பட அனைத்தும் அடங்கலாக.

பரப்பளவு ஏ: 00, றூட்: 01, பேர்ச் 18.
இது புத்தளம் காணிப்பதிவகததில் Q 140/265 இன் கீழ் பதிவு செய்யப்பட்டு உள்ளது.

**ஆதனத்துக்குச் செல்லும் பாதை.**

*கல்பிடிய - பாலாவிப் பாதையில் குரிஞ்சம்பிட்டிய சந்தி வரை வந்து அந்தச் சந்தியின் வலது பக்கம் இருக்கும் கந்தக்குளிய பாதையில் சுமார் 05 கிலோ மீட்டர் அளவு செல்லும் போது அகப்படும் எரி பொருள் நிரப்பு நிலையத்தை தாண்டியவுடன் அகப்படும் முச்சந்தியால் இடது பக்கமாக இருக்கும் பாதையில் 100 மீட்டர் அளவு சென்றவுடன் பாதையின் இடது பக்கத்தில் அகப்படும் அடிப் பாதையில் (மணல் பாதை) இல் 25 மீட்டர் அளவு சென்றவுடன் பாதையின் வலது பக்கமாக இந்த ஆதனம் அமைந்துள்ளது.*

*பிரதி பிசுக்கால் மூலம்*
*2020ஆம் ஆண்டு மாச்சு மாதம் 27ஆந் திகதி மு. ப. 11.00 மணிக்கு*
*ஆதனம் அமைந்துள்ள இடத்தில் ஏல விற்பனை செய்யப்படும்.*

**பணம் செலுத்தும் முறை:**

*ஏல விற்பனையின் இறுதியில் ஆதனத்தை வாங்கியவர் கீழ்க் குறிப்பிட்டுள்ளவாறு கொடுப்பனவை பணமாகச் செலுத்தல் வேண்டும்.*

1. *வாங்கிய விலையின் (நூற்றுக்கு இருபத்தைந்து) 25%*
2. *மாகாண அதிகார சபையின் வரியாக (நூற்றுக்கு ஒன்று) 1%*
3. *பிசுக்கால் கமிஷன், சிவில் நடை முறைச் சட்டத்தின் 258 ஆம் பிரிவின் பிரகாரம் கீழ் பிசுக்கால் கமிஷன் பணம்*
4. *அனைத்து விளம்பர கட்டணங்கள்*
5. *எழுதுவினைஞர், அறிவிப்பாளர் கட்டணமாக ரூபா 500.00/-*
6. *விற்பனைச் செலவுகள், வேறு கட்டணங்கள் இருப்பின் அந்தப் பணம்.*
7. *விற்பனை அத்தாட்சிப்பத்திரத்துக்கான முத்திரைக் கட்டணம்.*

*குறிப்பிட்ட ஆதனத்தின் விற்பனை நீதிமன்றின் அனுமதியின் பிரகாரம் செய்யப்படும்.*

*வாங்கிய விலையின் மிகுதி 75% (நூற்றுக்கு எழுபத்தைந்து) மான பணத்தை விற்பனைத் திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் மேற் கண்ட வழக்கின் கணக்கில் வைப்புச் செய்யப்படல் வேண்டும்.*

*மேற் குறிப்பிட்டவாறு பணத்தை 30 நாட்களுக்குள் மேற் குறிப்பிடப்பட்ட முழுத் பணத்தையும் செலுத்தாவிடின் ஏற்கனவே செலுத்திய பணத்தை திருப்பிச் செலுத்தாமல் விடவும், மீண்டும் ஆதனத்தை ஏல விற்பனையின் மூலம் விற்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும்.*

*உரிமைப் பத்திரம் வேறு விபரங்களை பரிசீலிக்கவும், மேலதிக விபரங்களுக்கு, பிரதேச முகாமையாளர் "மக்கள் வங்கி, பிரதேச அலுவலகம், மக்கள் வங்கிக் கட்டிடம், (முதலாம் மாடி) இல. 79, மாரவில வீதி, நாத்தாண்டிய, என்ற முகவரியில் பெற்றுக் கொள்ள முடியும்.*

*தொலைபேசி:- 032 - 2253300, 032 - 2253301,* *தொலைநகல்:- 032 - 2255247.*
*பதிவாளர்/பிரதி பிசுக்கால்,*
*மாவட்ட/நீதவான் நீதிமன்றம்,*
*புத்தளம்.*
*2020, சனவரி 22.*

*02 - 606*

# நானாவித அறிவித்தல்கள்

## மனு பற்றிய அறிவித்தல்

### கொழும்பில் நடைபெறும் மேல் மாகாணத்தின் வர்த்தக மேல் நீதிமன்றத்தில்

ஹோகந்தர, ஹோகந்தர தெற்கு, இல. 69/1
இல் தலைமை காரியாலயம் அமைந்துள்ள
இஸாரா என்ஜினியரிங்
என்ட் லொறி பொடி (பிரைவேட்) லிமிட்டட்
ஒடுக்கப்படும் விடயத்தில்

வழக்கு இல:
HC/ Civil/ 58/ 2019/CO

மற்றும்

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க,
கம்பனிகள் சட்டத்தின் 270 (அ) மற்றும்/அல்லது
(இ) மற்றும்/அல்லது (ஈ) ஆகிய
அத்தியாயத்தின்
கீழ் இஸாரா என்ஜினியரிங் என்ட் லொறிபொடி
(பிரைவேட்) லிமிட்டட் கலைத்தல் சம்பந்தமாக
272 (1) அத்தியாயத்தின் கீழ் விடுக்கப்படும்
வேண்டுகோள்

இஸாரா என்ஜினியரிங் என்ட் லொறி பொடி
(பிரைவேட்) லிமிட்டட்
இல. 69/1, ஹோகந்தர தெற்கு,
ஹோகந்தர.

மனுதாரர்

கொழும்பில் அமரும் மேல் மாகாணத்தின் வர்த்தக மேல் நீதிமன்றத்தின் மேலே பெயர் குறிப்பிட்ட கம்பனியை ஒடுக்குவதற்கான மனுவொன்று 2019, யூலை 25 ஆந் திகதியன்று முன்வைக்கப்பட்டதென்றும், மனுதாரர் சார்பாக சட்டத்தரணி திருமதி எஸ். என் ராஜபக்ஸ அவர்களால் முன்வைக்கப்பட்ட 2020, மாச்சு 19 ஆந் திகதி சொல்லப்பட்ட நீதிமன்றத்தின் முன்னர் கேட்கப்படுவதற்குப் பணிக்கப்பட்டுள்ளதென்றும் இத்தால் அறிவித்தல் கொடுக்கப்படுகின்றதுடன், சொல்லப்பட்ட மனு மீது கட்டளையொன்று ஆக்கப்படுவதை ஆதாரப்படுத்துவதற்கு அல்லது எதிர்ப்பதற்கு விரும்புகின்ற சொல்லப்பட்ட கம்பனியில் எவரேனும் கடன்கொடுனர் அல்லது உதவு தொகை செலுத்துநர் அந்நோக்கத்திற்காக நேரடியாகவோ அல்லது அவரது சட்டத்தரணி மூலமாகலோ அல்லது பதிவு செய்யப்பட்ட அற்றோணி மூலமாகவோ கேட்பு நேரத்தில் தோன்றலாம். அத்துடன் மனுவின் பிரதியொன்று, அதனைத் தேவைப்படுத்தும் சொல்லப்பட்ட கம்பனியின் எவரேனும் கடன்கொடுநருக்கு அல்லது உதவுதொகை செலுத்துநருக்கு, அதற்காக விதித்துரைக்கப்பட்ட கட்டணக் கொடுப்பனவின் மீது கீழே கையொப்பமிட்டவரினால் கொடுத்துதவப்படும்.

சட்டத்தரணி (திருமதி) எஸ். என். ராஜபக்ஸ,
மனுதாரரின் சட்டத்தரணி,
இல. 700/120, பெரேரா மாவத்தை,
தலவத்துகொடை.

**குறிப்பு**:- சொல்லப்பட்ட மனுவின் கேட்பின் போது தோன்றுவதற்கு உட்கருதுகின்ற எவரேனுமாள் அவ்வாறு செய்வதற்கான அவரது உட்கருத்துப் பற்றிய எழுத்திலான அறிவித்தலை மேலே பெயர் குறிப்பிடப்பட்டுள்ள சட்டத்தரணியான திருமதி எஸ். என். ராஜபக்ஸ என்பவருக்குச் சேர்ப்பித்தல் வேண்டும் அல்லது அஞ்சலின் மூலம் அனுப்புதல் வேண்டும். அறிவித்தலானது ஆளின் பெயரையும் முகவரியையும் அல்லது குழுமமொன்றாயின் குழுமத்தின் பெயரையும் முகவரியையும் கூறவேண்டுமென்பதுடன் அவ்வாளினால் அல்லது அக்குழுமத்தினால் அல்லது அவரது அல்லது அவர்களது பதிவு செய்யப்பட்ட அற்றோனிகளால் (எவரேனுமிருப்பின்) கையொப்பமிடப்படுதலும் வேண்டும். மேலே பெயர் குறிப்பிடப்பட்டவருக்கு 2020, மாச்சு 18 ஆம் நாளன்று பி. ப. 6.00 மணிக்கும் பிந்தாமல் சமர்ப்பிக்கப்பட வேண்டும். அல்லது அஞ்சலிலிடப்படின் அந்நேரத்திற்கு முன்னர் அவரைச் சென்றடையக்கூடிய வகையில் போதிய நேர காலத்துடன் அஞ்சலில் அனுப்பப்படல் வேண்டும்.

01-684

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.